RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2532

OPEN ACCESS

# கரிசல் புதினம் புலப்படுத்தும் மக்களின் வாழ்க்கைச் சிக்கலுக்கான தீர்வுகள்

ப. அன்பரசி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-625009, தமிழ்நாடு, இந்தியா

# The novel "Karisal" reveals solutions to people's life problems

**P. Anbarasi** [a, *]

[a] Department of Tamil, Thiagarajar College, Madurai, India

* Corresponding Author: anbuphd85@gmail.com

Received: 16-04-2025
Revised: 25-06-2025
Accepted: 01-07-2025
Published: 10-07-2025

Check for updates

**ABSTRACT**

Life is full of struggle. Living beings face social situations in order to live that life. Humans too will live a life of slavery until they accept their complicated lives. If we start fighting against the problems, change will happen. If working people start fighting, the social inequality will change and balance will emerge. The basic reason for the emergence of balance will be that people get education and act with awareness, are united among themselves, and take the product of their labor themselves.

**Keywords:** struggle, Karisal, Awareness, Social Inequality

## முன்னுரை

இலக்கியம் தான் தோன்றிய காலத்து மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. அவை சித்திரிக்கும் மக்களின் வாழ்வியலில் இன்பம், துன்பம் இரண்டும் இணைந்து காணப்படும். மக்களின் வாழ்வியல் அவர்களது தொழிலோடு தொடர்புடையதாக இருக்கும். அத்தொழிலில் ஏற்படும் சிக்கல்கள் மக்களின் நடைமுறை வாழ்வியலைப் பாதிப்பனவாக உள்ளன. கரிசல் புதினத்தில் பொன்னீலன் பதிவுசெய்துள்ள மக்களின் இத்தகைய சிக்கல்களையும் அதனை மக்கள் எதிர்கொள்ளும் முறையையும் அதனைத் தீர்ப்பதற்கு அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளையும் அதன்மூலம் தங்களது வாழ்வியலை முன்னேற்றிக் கொண்டமையையும் ஆராய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

## மனித உரிமைகள்

உலகில் பிறந்த உயிர்கள் அனைத்திற்கும் உயிர்வாழ்வதற்கான உரிமைகள் உள்ளன. இதனையே வள்ளுவர்,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்

என்றார். உலக உயிர்களில் மனிதனுக்கு சில அதிகப்படியான உரிமைகள் இருப்பதை சட்டம் வலியுறுத்துகின்றது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மனிதனுக்கான அடிப்படை உரிமைகளாக,

1. சமத்துவ உரிமை

2. சுதந்திர உரிமை. இதில் பேச்சு மற்றும் கருத்துக்களை வெளியிடும் உரிமை, அமைதியாக ஆயுதங்களின்றி கூடும் உரிமை, சங்கங்கள் அல்லது கூட்டமைவுகள் அமைக்கும் உரிமை, இந்திய ஆட்சிநிலவரை எங்கணும் தடையின்றிச் சென்றுவரும் உரிமை, இந்திய ஆட்சி நிலவரையின் எப்பகுதியிலும் குடியிருப்பதற்கும் நிலையாகக் குடியமர்வதற்குமான உரிமை, விழைதொழில் எதனையும் புரிந்து வருவதற்கும் அல்லது வாழ்தொழில், வணிகத்தொழில் அல்லது ஆகுதொழில் எதனையும் நடத்தி வருவதற்கும் உரிமை,

3. சமயச் சுதந்தரத்திறகான உரிமை

4. சுரண்டலைத் தடுப்பதற்கான உரிமை

5. பண்பாடு மற்றும் கல்வி உரிமை

6. அரசியலமைப்பு மூலம் தீர்வு காணும் உரிமை"

ஆகிய 6 உரிமைகளையும் குறிப்பிட்டுள்ளது.

## சுரண்டல் மற்றும் குறைந்த ஊதியத்தை எதிர்த்தல்

முதலாளிக்கு பொருளும் பணமும் சொந்தமாகவும் உழைப்பாளிக்கு உழைப்பும் வறுமையும் சொந்தமாகவும் ஒரு காலத்தில் முதலாளிகளால் நிலைநிறுத்தப்பட்டிருந்தது.

"ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்

உதையப்பராகிவிட்டால்

ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி

ஒப்பப்பர் ஆகிவிடுவர் உணரப்பா நீ" (https://eluthu.com/kavignar-kavithai/1572.html)

என்ற பாரதிதாசனின் வரிகளுக்கு ஏற்ப உழைக்கும் மக்கள் தங்களது உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெற முயன்ற போது உரிமைக்குரல் மேலோங்கியது. "ஒருவரது பிறப்பு, நாடு, சாதி, சமயம், சொத்து, நிறம் ஆகிய எதனாலும் வேறுபடுத்திப்பார்க்க முடியாதன அவ்வுரிமைகள்" (இராஜமுத்திருளாண்டி, 2014, இலக்கியத்தில் மனித உரிமைகள், பக்.4-5). கரிசல் புதினத்தில் முதலாளி, விவசாயக் கூலி மக்களின் உழைப்பைச் சுரண்டி குறைந்த ஊதியம் கொடுக்கிறார். தனது செயலுக்கு உலக நடைமுறையாக,

"எல்லா வேலைக்கும் பணமாத்தான் குடுக்கிறாக. ஒங்களுக்கு மட்டும் என்ன தானியக்கணக்கு"

"வெளையிறதம்புட்டையும் ஒங்கிட்ட அளந்து குடுத்துகிட்டு, நாங்க என்ன வெறுங்கைய நக்கிக்கிட்டு ஊர் வழியே திரியவா?" (பொன்னீலன், 2009, ப.45)

என்று கூறி மறுக்கிறார். விவசாயக் கூலி மக்கள் தங்களது ஊதியமாக ஒரு நாளுக்கு இரண்டுபடிப்புல் அல்லது அதற்குத் தகுந்த பணம் வேண்டும் என்ற தங்களது கோரிக்கையை,

"ரூவாய்க்கி ஒண்ணரைப்படி தானியம் விக்கிற போதுவச்ச கணக்கு, முக்காப்படிப் புல்லுவிக்கிற நேரத்துல எப்படி சரிப்படும் மொதலாளி? கூலிக்காரன்னாலும் அவனுக்கும் வகுறு இருக்கில்ல"

"முழு வேலக்காரனுக்கு ஒருநாள் கூலி ரெண்டுபடிப்புல்லு. நீங்க பணமாக் குடுத்தாலுஞ்சரி பொருளாக் குடுத்தாலுஞ்சரி. இந்தக் கணக்குப்படி குடுங்க, போதும்! நீங்க ரெண்டு ரூவான்னு கணக்குவச்சா, அந்த ரெண்டு ரூவாய்க்கும் இப்ப ஒண்ணயரைக்காப்படி புல்லு கூடக் கெடையாதே!" (பொன்னீலன், 2009, ப.45)

என்று உரிமையோடு கேட்கின்றனர். தங்களது நிலையை எடுத்துரைத்து தங்களுக்கான உரிமையைப் பெற முயற்சிக்கின்றனர். காலத்திற்கேற்ப ஊதியத்தை உயர்த்தாது இருந்த முதலாளிக்கு தங்களது நிலையை மக்கள் எடுத்துரைக்கின்றனர்.

## படிப்பகம் கட்டுதல்

மக்களுக்கு அறிவைக் கொடுத்தால் அவர்களது அறியாமை இருள் விலகிவிடும். அடிமைப்படுத்தப்பட்ட மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த அவர்களுக்கு கல்வியறிவு புகட்ட வேண்டும். கல்வி அறிவு பெறுவதினால் மனிதனுக்கு சமுதாயத்தில் கிடைக்கும் மதிப்பினை,

"வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே" (புறநானூறு, 2007, பா.183, அடி.8-10)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. கரிசல் புதினத்தில் வீரையன் என்ற விவசாயக்கூலி தங்களது கிராமத்தில் படிப்பகம் கட்ட வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனை உடையவனாக இருக்கிறான். இதனை,

"வீரையன் வெட்கத்துடன் கேட்டான். "நம்மூர்ல ஒரு படிப்பகம் கட்டலாமாயா" (பொன்னீலன், 2009, ப.54)

என்ற வரி புலப்படுத்துகின்றது. மக்கள் படிப்பறிவு பெறவிடக்கூடாது அவர்கள் கல்வியறிவு பெற்றுவிட்டால் தங்களுக்கு அடிமையாக இருக்கமாட்டார்கள் என அனைத்து முதலாளிகளும் எண்ணுவர். பெருமாள்புரத்தில் உள்ள முதலாளியும் மக்கள் செய்தியைத் தெரிந்து கொள்ளக்கூடாது என எண்ணுகிறார். அதனை,

"மொதலாளிகிட்ட சொன்னென். செய்தி படிச்சா ஊரு கெட்டுப் போகும்ங்காரு" (பொன்னீலன், 2009, ப.54)

என்ற வரியில் பொன்னீலன் பதிவு செய்துள்ளார்.

வீரையன் ஒருவன் எண்ணி மக்களால் உருவாக்கப்பட்ட படிப்பகத்தில் மக்கள் செய்திதாளை வாசித்து உலக அறிவைப் பெருக்கிக்கொண்டதை,

"படிப்பகத்தின் முன்னால் வீரையனும் அவன் தோழர்களும் உட்கார்ந்திருந்தார்கள். அப்பணசாமி செய்தித்தாளை ராகம் போட்டு வாசித்து விளக்கிக்கொண்டிருந்தான்" (பொன்னீலன், 2009, ப.251)

என்ற பகுதி விவரிக்கின்றது. ஊரில் உள்ள ஆண், பெண் எனப் பிறரும் படிக்க விரும்புகின்றனர். வீரசின்னுவின் படிக்கும் விருப்பத்தை,

"வீரசின்னு கேட்டான், "வாத்தியாரே எனக்குக் கொஞ்சம் வாசிக்கக்கத்துக் குடுப்பீகளா?" (பொன்னீலன், 2009, ப.282)

என்ற பகுதியும், மூக்காயி படிக்க விரும்புவதை,

"அவள் கேட்டாள், "எனக்கு எழுத வாசிக்கக் கத்துக் குடுப்பியா?" (பொன்னீலன், 2009, ப.289)

என்ற பகுதியும் தெளிவிக்கின்றது.

## உழைப்பாளிகள் ஒற்றுமையும் கூலிபோடுதலும்

பொருள் வைத்திருப்பவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்தால் வறுமை இருக்காது. யாரும் துன்பப்படமாட்டார்கள் என்பதை உழைப்பாளிகள் உள்ளிட்ட அனைவரும் எண்ணிச் செயல்பட்டால் சமுதாயத்தில் ஒற்றுமையும் முன்னேற்றமும் ஏற்படும் என்பதற்கு கரிசல் புதினம்

சான்றாக உள்ளது. பெருமாள்புரத்தில் முதலாளி, தொழிலாளி போராட்டம் வலுப்பெறுகிறது. இதனால் கூலி கிடைக்காமல் மக்கள் பசியினால் துன்புறுகின்றனர். அவர்களுள் ஒருவனாக ரங்கண்ணன் தன்னிடம் இருந்த ஆடுகளை விற்றுத் தன்னோடு இருக்கும் மக்களுக்கு உணவு தானியங்களைக் கொடுக்க எண்ணுகிறான். இதனை,

"ஒருவேள வேற வழியே இல்லாம ஒன் ஆடுகளையே வித்துக் கூலி போட வேண்டியது வந்திரிச்சி. அதச் செய்வியா? இல்ல, சொல்லாமக் கொள்ளாம ஓடுவியா?

ரங்கண்ணன் முறுவல் பூத்தான், "அப்ப இவ்வளவு தான் என்னபப்பத்தி புரிஞ்சிருக்க… அ?

வீரையன் பெருமிதத்தோடு சொன்னான்.

"இவ்வளவு உறுதி இருக்கும்போது எப்படிண்ணே நமக்குக் கஷ்டம் வரும்? அரவயத்துக் கஞ்சியாச்சும் எல்லாத்துக்கும் சந்தோசமா ஊத்தலாம். கொஞ்சங்கூட பயப்படவேண்டியதில்ல" (பொன்னீலன், 2009, ப.285) என்ற கதைப்பகுதி தெளிவிக்கின்றது.

ரங்கண்ணனைத் தொடர்ந்து வீரையனின் தாய் அடுத்த கூலி போடுவதற்காகத் தனது காதில் இருந்த தோடுகளை,

"பொண்டாட்டியப் பலிக்கொடுத்துப் படியளக்கிறான் சொரணையுள்ள மவராசன்… அவனக் கையெடுத்துக் கும்புடணும்… இந்தா, அடுத்த கூலிக்கி இந்த ஓலரெண்டையும் வித்து எடுத்துக்க" கிழவி தன் நீண்ட காதுகளில் கிடந்த தங்க ஓலைகள் இரண்டையும் கழற்றி கொண்டப்பன் முன் வைத்தாள். அந்த ஓலைகள் அவள் கணவன் கலியாணத்தின்போது ஆசையாக வாங்கிக் கொடுத்தது. எவ்வளவோ இன்னல்களுக்கிடையிலும் அவள் இதுவரை விற்காமல் பாதுகாத்து வந்திருந்தாள்" (பொன்னீலன், 2009, ப.307) என்ற கதைப்பகுதி விவரிக்கின்றது.

## சங்கம் அமைத்தல்

தனி ஒருவர் போராட்டத்தை விட பலர் முயற்சி செய்தால் வெற்றி விரைவாகக் கிடைக்கும். அதன் மூலமாக உருவானதுதான் சங்கம். அடித்தட்டு, உழைக்கும் மக்கள் தங்களது நியாயமான கோரிக்கைகளை, உரிமைகளைப் பெறுவதற்காக சங்கம் அமைத்துப்போராடுவர். "இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் 19(1) பிரிவு, அனைத்துக் குடிமக்களுக்கும் தங்களுக்கான சங்கம் மற்றும் கூட்டமைப்பை உருவாக்கிக்கொள்வதற்கான உரிமையை வழங்குகிறது" (https://www.vikatan.com/government-and-politics/)

அவ்வாறு போராடினால் வெற்றி கிட்டும். கரிசல் புதினத்தில் பெருமாள்புர மக்கள் தங்கள் ஊரில் உள்ளது போன்றே பிற ஊர்களிலும் விவசாய சங்கம் அமைக்க முற்படுகின்றனர். இதனை,

"சுத்துப்பட்டிகளெல்லாம் வேறொரு வகையா வாழும்போது, நாம தனிக்கிராமமா நின்னு எதுத்துச் சமாளிக்க முடியாது. நாலு மொதலாளிமாரு சேந்துக்கிட்டாங்கன்னா போதும்! அவங்க கிட்ட பணம் இருக்கு. அரசாங்கம் இருக்கு. நாம எதுத்துப் போராடணும்னா, நம்மவங்கள ஒண்ணுதெரட்டி ஆகணும். சுத்துப்பட்டிகள்ல எல்லாம் நம்மூர்ல மாதிரி விவசாயச் சங்கம் அமைக்க ஏற்பாடு பண்ணணும். அவங்களையும் போராட வைக்கணும். அதுதான் அடுத்த மிக முக்கியமானவேல" (பொன்னீலன், 2009, ப.253) என்ற பகுதி விவரிக்கின்றது.

ஆண்கள் மட்டும் போராடுவதைவிட பெண்கள் உட்பட அனைவரும் போராட வேண்டும் என பெண்களையும் சங்க வேலையில் ஈடுபடுத்துகின்றனர். வீரையன் மூக்காயியையும் சங்கப் பணிக்கு அழைத்து, எவ்வாறு சங்கப்பணி செய்யவேண்டும் என்றும் அறிவுறுத்துகிறான். அதனை,

"நாள மொதக் கொண்டு, தெனமும் ஒரு நாலு பேரு சுத்துப்பட்டிகளுக்குப் போயி, நாம எப்பிடி இருக்கோம், எப்பிடி இருக்கணும், அதுக்கு என்ன செய்யணுங்கிறதெல்லாம் சொல்லிக் குடுக்கணும்னு தீர்மானம் பண்ணியிருக்கொம். இடையிடையே நீயும் வரவேண்டியதிருக்கும்"

“ஒம் மனசில என்ன தோணுதோ அதச் சொல்லு. நாம ராவும் பகலும் ஒழச்சி வெளைய வெச்சத இன்னொரு சோம்பேறித் திருடன் வீட்ல கொண்டு போயி கொட்டுறது தப்புன்னு சொல்லத் தெரியாது? நாமெல்லாம் ஒண்ணு சேந்து சண்ட போட்டாத்தான் நமக்கு வேண்டியது கெடைக்கும்னு சொல்லத் தெரியாது?” (பொன்னீலன், 2009, ப.260) என்ற கதைப்பகுதி தெளிவிக்கிறது.

உழைப்பாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்துவிட்டால் முதலாளி, தொழிலாளி என்ற வேறுபாடு இருக்காது என வீரையன் கூறுவதை,

“எல்லாருமாச் சேந்து எடுத்துக்கிர வேண்டியதுதான். இந்த நெலமெல்லாம் யார் கையில் இருக்கு? நம்ம கையிலதான். நாமவேல செய்யல்லனா நெலம் எங்க இருந்து விளையும்? அவுக எப்பிடி சாப்பிடுவாக? தா… நம்ம நாடு ரெம்ப பெரிய நாடு. வடக்கே பெரிய மலை இருக்கு. இமய மலன்னு பேரு. அதில இருந்து தெக்க கன்னியாகுமரி வரைக்கும் எங்க பாத்தாலும் வெளைச்சல் நெலம். அந்த நெலமெல்லாமே நமக்குச்சொந்தம். நெலம்னா லேசான நெலமா? எப்பேர்ப்பட்ட நதியெல்லாம் ஓடுது. எவ்வளவு செழிப்பு. அம்புட்டு நெலத்திலேயும் நாமதான ஒழைக்கிறோம். இவ்வளவு பேரும் ஒண்ணு சேந்துக்கிட்டா?” (பொன்னீலன், 2009, ப.261) என்ற கதைப்பகுதி புலப்படுத்துகின்றது.

உழைத்தல், ஊதியத்தினைப் பங்கிடுதல் ஆகிய அனைத்தும் தொழிலாளர் சங்கம் மூலமாகவே நடைபெற வேண்டும். அப்போதுதான் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும் என அவர்கள் முடிவு எடுப்பதை,

“அப்ப, வேல வாங்குரது கூலி குடுக்கிறதெல்லாம்?”

“அதுக்குத்தான் நாம அமச்சிருக்கோமில்ல விவசாயி சங்கம். அது மாதிரி சங்கங்க நாடு பூராவும் அமைக்கணும். நெலமெல்லாம் சங்கத்துக்குச் சொந்தம் அவரவர் தெறமைக்கித்தக்க ஒழைக்கணும் தேவைக்கித்தக்க பங்கு வச்சிக்கிரணும்” (பொன்னீலன், 2009, ப.261) என்ற கூற்று தெளிவிக்கின்றது.

சங்கம் அமைத்தால் முதலாளி என்ற ஒருவர் இருக்கமாட்டார். உழைக்கும் மக்களே அவர்களுக்கு முதலாளி என்ற நிலை வரும் என்பதை,

“வாழணும்னு ஆசப்படுற எல்லாருமே எதாவது ஒரு விதத்தில நாட்டுக்கு ஒழச்சித்தான் ஆகணும். நாமதான் நமக்கு மொதலாளி. வேற மொதலாளி கெடையாது”

“நம்மவங்க ஒண்ணு சேந்திட்டா வந்திரும். இப்பவே யோசிக்கத் தொடங்கிட்டாக. கூடிய சீக்கிரத்துக்குள்ள ஒரு பெரிய மாறுதல் வரப்போகுது. அப்ப மொதலாளியும், தொழிலாளியும் சமமாயிருவாக. எல்லாரும் ஒழைப்பாக!” (பொன்னீலன், 2009, ப.261) என்று பொன்னீலன் பதிவு செய்துள்ளார்.

## கொள்ளையர்களை விரட்டுதல்

கரிசல் புதினத்தில் முதலாளி பெருமாள்புர மக்களைப் பழிவாங்குவதற்காக வெளியூர் ஆட்களைக் கூலி வேலைக்கு அழைத்து வருகிறார். கூலியாட்களாக வந்தவர்கள் திருடர்களாக மாறி முதலாளியின் பொருட்களைக் கொள்ளையடிக்க முயல்கின்றனர். பெருமாள்புர கிராம மக்கள் அனைவரும் ஒன்று கூடுகின்றனர். அவர்கள் கொள்ளையடிக்க எண்ணும் பொருள் தங்களுக்கானது எனத் தெளிவிக்கின்றனர். அதனால் அப்பொருட்களைக் காப்பாற்றி, அதில் தங்களுக்குத் தேவையானதைத் தாங்களே எடுத்துக்கொள்கின்றனர். இதனை,

“அவனுக கொள்ளையடிக்கிறது யார் தானியம்யா? நாம ரெத்தஞ் சிந்திச் சம்பாரிச்சது. நாம செஞ்ச வேலைக்குஞ் செய்யப்போற வேலைக்குங் கூலிய்யா! நாம கொள்ளையடிச்சா அதில அர்த்தம் உண்டு. தொடர்பில்லாத இன்னொருத்தன் கொண்டுபோக நாம பாத்திக்கிட்டிருக்க? நாம

ஒழுங்காக் கஞ்சி குடிச்சி எத்தின நாளாகுதுயா? ஊர்த்தானியம் வெளி போயிட்டுன்னா, பெறகு எதவச்சித் திங்கிறதாம்?" (பொன்னீலன், 2009, ப.249)

"ஆளாளுக்கு நாலு நாள் கூலிக்குத்தக்க தவசம் அள்ளிக்கிட்டு வந்திட்டோம்" (பொன்னீலன், 2009, ப.252) என்ற கூற்று விவரிக்கின்றது.

## புதிய தொழில் தொடங்கல்

இனத்தின் அடிப்படையில் தொழில்செய்யும் நடைமுறை வழக்கத்தில் இருந்துள்ளது. ஆனால் அவரவர் விரும்பும் தொழிலைச் செய்துகொள்ளும் உரிமை இந்திய அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட அடிப்படை உரிமைகளுள் ஒன்றாகும். கரிசல் புதினத்தில் மக்கள் விவசாய வேலை மட்டுமே செய்து வந்தனர். பெருமாள்புர மக்களுக்கு விவசாய வேலையில் இடர்பாடுகள் நேர்ந்ததால் வீரையன் கரிமூட்டம் போடுதல் என்ற புதிய தொழிலைத் தொடங்குகின்றான். வீரையன் ஊர்ப்பொதுவில் உள்ள மரங்களை வெட்டிக் கரிமூட்டம் போட எண்ணுவதை,

"வேலிக்கருவையை வெட்டிக் கரிமூட்டம் போடுவது சிறந்ததாகத் தோன்றியது. ஒரு கோடாரி, ஒரு அரிவாள், ஒரு மண்வெட்டி வாங்கிவிட்டால் வேலை தொடங்கிவிடலாம்" (பொன்னீலன், 2009, ப.197)

என்ற கருத்தும் ஊர் மக்களில் ஒரு பகுதியினர் விவசாயத்தையும் ஒரு பகுதியினர் கரிமூட்டம் போடும் தொழிலையும் செய்யத் துணிவதை,

"நம்ம சங்கத்து ஆளுகள்ல ஒரு பதிநஞ்சி பேர இங்க அனுப்பு. தெனசரி ஒரு மூட்டம் போடலாம். கொறஞ்சது நூத்தம்பது ரூவா. நீங்க வெவசாயத்தப் பாருங்க. நாங்க கரிமூட்டத்தக் கவனிக்கிறோம்" (பொன்னீலன், 2009, ப.285)

என்ற பகுதி புலப்படுத்துகின்றது.

## அரசு அதிகாரிக்கான சிக்கல்

மக்கள் அனைவராலும் விரும்பப்படும் பணியாக அரசுப் பணி உள்ளது. அரசுப்பணியில் நேர்மையாக இருப்பவர்களுக்கு சிக்கல்கள் வருவதை கரிசல் புதினம் புலப்படுத்துகிறது. கண்ணப்பன் ஆசிரியர் பணிக்காக தெரியாத ஊருக்கு வந்து, அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார். பெருமாள்புர மக்களோடு இணைந்து வாழப் பழகிய பின்பு முதலாளியால் துன்புறுத்தப்படுகிறார். பள்ளிக்கு வந்து சத்துணவுப் பொருட்களை முதலாளி மறைத்து வைத்துக்கொள்கிறார். காவல்துறையினரைக் கொண்டு அதனைக் கண்டுபிடிக்கின்றார்.

ஆசிரியர் கூட்டணிக் கூட்டத்தில் அலுவலக முறைகேடுகளைப் பற்றிப் பேசியதற்காக கண்ணப்பனைப் பணி இடை நிறுத்தம் செய்கின்றனர். அடிவாங்கிய கண்ணப்பனை, உயர் அதிகாரி தன்னை அடித்ததாகக் கூறி இடை நிறுத்தம் செய்ய முயல்கின்றனர். அதை அறிந்த கண்ணப்பன் ஆசிரியர் சங்கக் கூட்டணி வழியாகப் போராட எண்ணுவதை,

"கூட்டணி வழியா போராடிப் பாப்போம். கெடச்சா கெடைக்கிது, கெடைக்காட்டிப் போகுது. எப்பிடியோ இந்த மண்ணோட பழகிட்டேன். வாழ்வோ, தாழ்வோ, இதோட இருக்கட்டும். வீரையனோட சேந்து விவசாயம் பாக்கிறது, அவங்க சாப்பிடுறது எனக்கும். அவனுக அட்டகாசம் எதுவரைக்கும் போகுதுன்னுதான் பாப்போமே" (பொன்னீலன், 2009, ப.315) என்ற கூற்று புலப்படுத்துகின்றது.

## முடிவுரை

பூமியில் தோன்றிய அனைத்து உயிரினங்களுக்கும் உயிர் வாழ்வதில் சிக்கல்கள் உள்ளன. மனித வாழ்க்கையிலும் அவ்வாறே நிகழ்கிறது. தேவைக்காக வேலை செய்தல், அதில் கிடைக்கும் ஊதியத்தினைக் கொண்டு உயிர் வாழ்தல் மக்களின் நிலையாக உள்ளது. போதிய அளவு ஊதியம் கிடைக்காத பொழுது மக்கள் நடைமுறையினை எதிர்த்துப் போராட்டம் செய்யத் துணிகின்றனர். உழைக்கும் மக்கள் போராடத் தொடங்கினால் சமுதாய ஏற்றத்தாழ்வே மாறி சமநிலை தோன்றிவிடும். சமநிலை தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக மக்கள் கல்வி அறிவு பெற்று விழிப்புணர்வுடன் செயல்படுதல், தங்களுக்குள் ஒற்றுமையாக இருத்தல், தங்களது உழைப்பிற்கான பொருளைத் தானே எடுத்துக்கொள்ளுதல் ஆகியவை அமையும் என்பதை கரிசல் புதினத்தில் பொன்னீலன் பதிவு செய்துள்ளார்.

## References


இராஜ முத்திருளாண்டி, (2014) இலக்கியத்தில் மனித உரிமைகள், குமரன் பதிப்பகம், சென்னை.

பாலசுப்பிரமணியன், கு.வெ. (2007) புறநானூறு மூலமும் உரையும், மூன்றாம் அச்சு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

பொன்னீலன் (2009) கரிசல். நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License